**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 90 /2021**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.11.2025 | | |
| பெயர்: | இளவரசி<br>(PW1- Chief.con ) | கணவர் பெயர்: | சிவபாலன் |
| கிராமம்: | மகேந்திரப்பள்ளி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 33/2025 |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி : 11.11.2025</u>**

1. 07.05.2019 –ம் தேதியிட்ட பவாணி என்பவர் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எழுதிக்கொடுத்த சுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

2. 16.03.1968–ல் சம்பந்தம் முதலியாருக்கு செல்லம்மாள் எழுதிக்கொடுத்த சுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

3. 27.05.2019–ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் (எண்ணிக்கை –4) அசல் **வா.சா.ஆ. 6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.